DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT, NAMAKKAL.

**CASE NO.STC.No.718/2025**

**PW–1**

| | | |
|---|---|---|
| Name | : | முருகன் |
| Father's Name | : | கருப்பண்ணன் |
| Village | : | மோகனூர் |
| Taluk | : | மோகனூர் |
| Calling | : | -- |
| Age | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the

**Date: 27.07.2026**

**விசாரணை தொடங்கும் நேரம்**: காலை **11.40 மணி**

**(எதிரி ஆஜரில்லை, எதிரி தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை:**

1) நான் நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், இராசிகுமாரபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். மேற்படி நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன்.

2) கடந்த 21.04.2025 ஆம் தேதி எதிரி, புகார்தாரருக்கு வழங்கிய காசோலை எண்.415951 அசல் **ம.சா.ஆ.1,** கடந்த 29.04.2025 ஆம் தேதியில் மேற்படி காசோலை திருப்பப்பட்டதற்கான வங்கி மெமோ அசல் **ம.சா.ஆ.2,** கடந்த 16.05.2025 ஆம் தேதி புகார்தாரர் தனது வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு அனுப்பிய பதிவு அறிவிப்பு அலுவலக நகல் **ம.சா.ஆ.3,** கடந்த 19.05.2025 ஆம் தேதி மேற்படி அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டமைக்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் **ம.சா.ஆ.4** ஆகும். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன். எதிரிக்கு தக்க தண்டனையும், எனக்கு இழப்பீடும் வழங்க பிரார்த்திக்கிறேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**விசாரணை முடியும் நேரம்: காலை 11.45 மணி**